# ஹரோ தமிழ் பாடசாலை திருக்குறள் போட்டி 2026

# ஆண்டு - 5 (Year 5)

## 1/09/2015 - 31/08/2016 பிறந்தவர்கள்

(ஹரோ தமிழ்ப் பாடசாலையின் தமிழ் வகுப்பு மாணவர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவர்)

## போட்டி நடைபெறும் திகதி 09/05/2026

## நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது

மாணவர்கள் 5 குறள்களையும் அதற்குரிய 4 பொருள்களையும் கூறவேண்டும்.

தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு (குறள் 396)

பொருள்:- தோண்டத் தோண்ட ஊற்றுநீரளவு பெருகுவது போலத் தொடர்ந்து படிக்கப் படிக்க அறிவு பெருகிக் கொண்டே இருக்கும்.

எல்லார்க்கும் நன்றாம் பணிதல் அவருள்ளும்
செல்வர்க்கே செல்வம் தகைத்து (குறள் 125)

பொருள்:- பணிவு என்னும் பண்பு, எல்லார்க்கும் நலம் பயக்கும் என்றாலும், செல்வர்களுக்கு அந்தப் பண்பு, மேலும் ஒரு செல்வமாகும்.

முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்
தகநக நட்பது நட்பு (குறள் 786)

பொருள்:- இன்முகம் காட்டுவது மட்டும் நட்புக்கு அடையாளமல்ல; மனமார நேசிப்பதே உண்மையான நட்பாகும்.

வேண்டுதல்வேண் டாமை இலானடி சேர்ந்தார்க்கு
யாண்டும் இடும்பை இல (குறள் 4)

**பொருள்:-** விருப்பு வெறுப்பற்ற ஆண்டவனைப் பின்பற்றி நடப்பவர்களுக்கு ஒருபொழுதும் துன்பம் ஏற்படுவதில்லை

**முகத்தான் அமர்ந்து இனிதுநோக்கி அகத்தானாம்**
**இன்சொ லினதே அறம்.** (குறள் 93)

**பொருள்:-**முகம் மலர நோக்கி, உள்ளம் கலந்த இனிய சொற்களை கூறுவதே அறமாகும்.